# வலி மிகும் இடங்கள்

- கதைக்களம்
- 7.7.2018




சித்ரா தணிகைவேல்

சில அடிப்படைகளை நினைவு கூர்வோம் ............

வல்லொற்றுக்கள் யாவை? – க, ச, த, ப

நிலைமொழி, வருமொழி என்றால் என்ன?

(எ.கா) நிலாப்பெண்

நிலா - நிலைமொழி

பெண் - வருமொழி

.

# வலி மிகா இடங்கள்

1. உம்மைத் தொகைகளில் வலி மிகாது.
   (எ.கா) பால்பழம் (பாலும் பழமும்)

2. வினைத்தொகையில் வலி மிகாது.
   (எ.கா) ஆடுகளம் (ஆடிய களம், ஆடுகின்ற களம், ஆடும் களம்)

3. உயர்திணைப் பெயரின் பின் வலி மிகாது.
   (எ.கா) மாணவர் பணி
   (விதிவிலக்கை நினைவு கூர்க - ய், ர், ழ் கொண்டு முடியும் சொற்களின் பின் வலி மிகும். எ.கா மோர்க் குழம்பு)

# வலி மிகா இடங்கள்

## எந்தெந்த வேற்றுமை உருபுகளின் பின் வலிமிகாது?

1. எழுவாய் வேற்றுமையின் பின் ஒற்று மிகாது. (உருபு கிடையாது)

   (எ.கா) கண்ணன் வந்தான்.

2. மூன்றாம் வேற்றுமை உருபுகளின் (ஆல், உடன், ஒடு) பின் ஒற்று மிகாது.

   (எ.கா) மரத்தால் செய்த பொம்மை.

3. ஐந்தாம் வேற்றுமை உருபின் (இன்) பின் ஒற்று மிகாது.

   (எ.கா) மனிதனின் கண்கள்

4. ஆறாம் வேற்றுமை உருபின் (அது) பின் ஒற்று மிகாது.

   (எ.கா) பறவையினது கூடு

5. ஏழாம் வேற்றுமை உருபின் (கண்) பின் ஒற்று மிகாது.

   (எ.கா) மரத்தின்கண் பறந்து வந்து அமர்ந்தது.

6. எட்டாம் வேற்றுமைக்கு உருபு கிடையாது. இது விளிச்சொற்களைக் கொண்டு வரும்

   (எ.கா) வேந்தே போற்றி!

# வலி மிகா இடங்கள்

## எந்தெந்த பெயரெச்சங்களின் பின் ஒற்று மிகாது?

அன்றைய, இன்றைய, என்றைய, அப்படிப்பட்ட, இப்படிப்பட்ட, எப்படிப்பட்ட, அப்போத, இப்போதைய, எப்போதைய, மேற்கத்திய, கிழக்கத்திய, தெற்கத்திய, வடக்கத்திய, முன்னைய, பின்னைய, நேற்றைய, நாளைய, இன்றைய ஆகிய பெயரெச்சங்களின் பின் ஒற்று மிகாது.

## தெரிநிலை பெயரெச்சங்களின் பின் ஒற்று மிகாது.

வந்த, வருகிற, சென்ற, செல்கிற

## குறிப்புப் பெயரெச்சங்களின் பின் ஒற்று மிகாது.

நல்ல, தீய, பெரிய, சிறிய

# வலி மிகா இடங்கள்

## வேறெந்தெந்த இடங்களில் ஒற்று மிகாது?

1. நிலைமொழியில் **னகர, ணகர** ஈற்றுப் பெயர்களும் வருமொழியில் வல்லினத்தை முதலாகக் கொண்ட பெயர்களும் சேர்ந்து அமைந்த தொகைகளில் ஒற்று மிகாது.

   (எ.கா) மின் + திறன் = மின்திறன்
   தேன் + கிண்ணம் = தேன்கிண்ணம்

2. எட்டு, பத்து அல்லாத எண்ணுப்பெயர் முன் ஒற்று மிகாது.

   (எ.கா) ஒரு கை, இரண்டு பெண்கள், மூன்று காலம், நான்கு திசைம், ஐந்து திணை, ஆறு தலை, ஏழு கடல், ஒன்பது கோல்

# வலி மிகா இடங்கள்

## வேறெந்தெந்த இடங்களில் ஒற்று மிகாது?

3. அளவு, சும்மா, அடிக்கடி, தடவை, முறை, ஆவது, முன்பு, பின்பு, பிறகு, போதும் என்னும் சொற்களின் முன் வலி மிகாது.

4. **முற்று வினைகளுக்குப் பின் வலி மிகாது.**

(எ.கா) கூவின + கோழிகள் = கூவின கோழிகள்

எழுந்தது + சூரியன் = எழுந்தது சூரியன்

5. **வடசொற்களின் முன்னால் மிகாது.**

(எ.கா) தின + தூது = தினதூது

இந்துமத + பாடசாலை = இந்துமத பாடசாலை

# பார்வை நூல்கள்


1. இக்காலத் தமிழ் இலக்கணம், டாக்டர் பொற்கோ, பாரி நிலையம், முதல் பதிப்பு 2002
2. தவறின்றித் தமிழ் எழுத, மருதூர் அரங்கராசன், முகிலன் பதிப்பகம், பதினான்காம் பதிப்பு: நவம்பர் 2015
3. நற்றமிழ் இலக்கணம், டாக்டர் சொ. பரமசிவம், பட்டுப் பதிப்பகம், 15-ஆம் பதிப்பு: 2016.

# நன்றி

